# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040869

1. District : நாகப்பட்டினம் மாவட்டம் / மாவட்டம்   PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம் / காவல்நிலையம்   Year: 2023 / ஆண்டு   FIR No.: 02/2023 / மு.த.அ. எண்   Date: 02.11.2023 / நாள்

2. (i) Act சட்டம்: P.C. (Amendment) Act, 2018   Sections பிரிவுகள்: 7, 7-A and 12
   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: of the prevention of
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 01.11.2023   Date to : நாள் வரை 02.11.2023
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் 19.00 Hrs   Time to : நேரம் வரை 02.00 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.11.2023   Time : நேரம் 07.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02.11.2023   Time : நேரம் 07.00 Hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   எழுத்து மூலமாக (Computer Typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 55 கி.மீ. தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி வேதாரண்யம் சார்-பதிவாளர் அலுவலகம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :   District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. ராஜேந்திரன்   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. வெங்கடாசல
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 40/2023   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர்   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், தஞ்சாவூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு M. பாபு, சார் பதிவாளர், வேதாரண்யம், நாகப்பட்டினம்
   (2) அலுவலக உதவியாளர் திரு. V.P. சந்திரசேகரன், த/பெ. வெங்கடாசலம், 23 ?, வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாரியான தாமதம்.

(HCL 12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — இல்லை —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று **02.11.2023** ஆம் தேதி காலை **07.00** மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக பொறுபப்பில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு. R.ஜெகதீசன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், R.ஜெகதீசன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 01.11.2023 ஆம் தேதி மாலை 19.00 மணி முதல் இரவு 02.00 மணி வரை நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலகத்தில், சார்பதிவாளர் திரு.M.பாபு என்பவர் முன்னிலையில் சோதனை மேற்கொண்டபோது 1)திரு.M.பாபு, சார்பதிவாளர், வேதாரண்யம் என்பவரிடமிருந்து சரிவர கணக்கு காட்டாத ரூபாய் 56,000/- மற்றும் பணம் மடித்து வைக்கப்பட்டிருந்த திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மகஜரில் குறிப்பிட்டுள்ளபடியான பிரிண்ட் செய்யப்பட்ட வெள்ளை நிற

(நகல் கணினி இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..........................................காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
(signature) 2/11/23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 2.11.2023

15. Date & Time of despatch to the court: 02.11.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G RAMESH KUMAR
Rank: நிலை ...................No. எண் ..........

**<u>நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>** :-

பேப்பர்கள் - 3, 2)ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் என்பவரிடமிருந்து சரிவர கணக்கு காட்டாத ரூபாய் 44,800/- ஆகக்கூடுதல் ரூபாய் 1,00,800/- சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் சார்பதிவாளர் திரு.M.பாபு என்பவர் பத்திரம் பதிவு செய்தவர்களிடமும் ஆவண எழுத்தர்களிடமும் கையூட்டாக பணம் கேட்டு பெற்று வைத்திருந்த பணம் மற்றும் ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன் சார்பதிவாளர் அவருக்கு சாதகமாக சார்பதிவாளர் அரசு பணியை செய்யவதற்கு தூண்டுதல் செய்ய கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இத்திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் ரூ.1,00,800/-, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் மகஜர், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் வேதாரண்யம் சார் பதிவாளர் திரு.M.பாபு மற்றும் ஆவண எழுத்தர் (No.B4913/84 NGM) திரு.V.P.சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் ஆகியோர் தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து தங்களிடம் ஆஜர்படுத்துகிறேன். எனவே எதிரிகள் 1)திரு.M.பாபு, சார்பதிவாளர், வேதாரண்யம் மற்றும் 2)ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் ஆகியோர்கள் மீது உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) R.ஜெகதீசன் **2/11/23** (R.ஜெகதீசன்) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் இன்று 01.11.2023 ஆம் தேதி மாலை 19.00 மணியளவில் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, வேதாரண்யம் யானைகட்டி தெருவில் அமைந்துள்ள மேற்குபார்த்த வாசல் உள்ள வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலகத்தை 1)திரு.R.ஜெகதீசன், த/பெ.ரெங்கசாமி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர், 2)திரு.G.ரமேஷ் குமார், ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுகுழு ஆய்வாளர் திரு.R.ஜெகதீசன் அவர்களால் மேற்படி வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, வேதாரண்யம் யானைக்கட்டி தெருவிலுள்ள வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவுகள் செய்வதற்கு வேதாரண்யம் சார்பதிவாளர், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பத்திரபதிவு செய்பவர்களிடம், பத்திரம் பதிவு செய்வதற்கு கையூட்டு கேட்டுப் பெறுவதாகவும், மேற்படி பொது பணியாளர்களுக்காக, பத்திரம் பதிவு செய்ய வருபவர்களிடம் ஆவண எழுத்தர்கள் கையூட்டு பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும்,

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 01.11.2023 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் உத்தரவின்பேரில், தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய நான் தஞ்சாவூரிலிருந்து மதியம் 13.00 மணிக்கு புறப்பட்டு நாகப்பட்டினம் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு வந்தும், அங்கிருந்து திரு.G.ரமேஷ்குமார், காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சகிதம் அரசு வாகனத்தில் நாகப்பட்டினம் லஞ்சஒழிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 01.11.2023 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு புறப்பட்டு வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 18.30 மணிக்கு வந்து, மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பணியிலிருந்த திரு.M.பாபு என்பவரிடம் திடீர் ஆய்வு விபரம் தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி சீர்காழி சார்பதிவாளர் அலுவலகமானது நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, வேதாரண்யம் யானைகட்டி தெருவில் மேற்குபார்த்த நுழைவாயிலுடன் கூடிய கீழ்தளம் மட்டுமுள்ள மாடிக்கட்டிடமாக அமைந்துள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் நுழைவாயிலுக்கு அருகில் பெரிய வராண்டாவும், வரண்டாவின் இடதுபுறம் கழிவறையும், வரண்டாவின் வலதுபுறம் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகளுடன் கூடிய அறை மற்றும் சிறிய வரண்டாவும், வரண்டாவிற்கு கிழக்கே சார்பதிவாளர் இருக்கையுடன் கூடிய பெரிய ஹாலும், ஹாலின் இடதுபுறம் அலுவலர்களின் மேஜையுடன் கூடிய இருக்கையும், ஹாலின் இடதுபுறம் கண்ணாடி தடுப்புடன்கூடிய கணினி அறையும், ஹாலுக்கு கிழக்கு பக்கம் உள்ள அறையில் பதிவுவைப்பறையும், கணினி அறையின் மேற்கு பக்கம் கழிவறையுமாக வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது வேதாரண்யம் சார்பதிவாளர் அறையின் வரண்டாவிற்கு வலதுபுறமுள்ள படிகட்டுகளுடன் கூடிய அறைக்கு அருகிலுள்ள சிறிய வரண்டாவில் வேதாரண்யம் சார் பதிவாளர் திரு.M.பாபு மற்றும் ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் என்பவரும், சார் பதிவாளர் அலுவலகத்தின் பெரிய வரண்டாவில் நின்றிருந்த 1)திரு.A.அருண்ராஜ், த/பெ.அமரேஷ், 16/30, சன்னதி கீழத்தெரு, வேதாரண்யம், 2)திரு.C.விவேக், சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் என்பவர்களும் இருந்தார்கள். தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, வேதாரண்யம் சார்பதிவாளர் அறையின் வரண்டாவிற்கு வலதுபுறமுள்ள படிகட்டுகளுடன் கூடிய அறைக்கு அருகிலுள்ள சிறிய வரண்டாவில் நின்றிருந்த வேதாரண்யம் சார்பதிவாளர் திரு.M.பாபு அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மூன்று பேப்பரில் தனித்தனியாக ரூபாய் நோட்டுகளை வைத்து ரப்பர் பேண்ட் சுற்றப்பட்ட மூன்று பணக்கத்தைகளை அவருக்கு பின்புறம் தூக்கி வீசினார். வேதாரண்யம் சார்பதிவாளர் திரு.M.பாபு அவர்கள் தூக்கி வீசிய ரப்பர் பேண்ட் சுற்றப்பட்ட மூன்று

பணக்கத்தைகளுடன் மேற்படி நான்கு நபர்களையும் அழைத்துக்கொண்டு வேதாரண்யம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் அழைத்து வரப்பட்டது. ஆய்வுக்குழு ஆய்வாளர் அங்கிருந்தவர்களை விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சரியான முகாந்திரம் கூறிய தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது வேதாரண்யம் சார்பதிவாளர், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பத்திரபதிவு செய்பவர்களிடம், பத்திரம் பதிவு செய்வதற்கு கையூட்டு கேட்டுப் பெற்ற பணமாக இருக்கலாம் என்பதன் அடிப்படையிலும், மேற்படி பொது பணியாளர்களுக்காக, பத்திரம் பதிவு செய்ய வருபவர்களிடம் ஆவண எழுத்தர் கையூட்டு பெற்று பொது பணியாளர்களை அவர்களுக்கு சாதகமாக பத்திரம் பதிவு செய்ய தூண்டுவதற்காக அவர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,00,800/-(ரூபாய் ஒரு லட்சத்து எண்ணூறு மட்டும்) திடீர் ஆய்வின் போது மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப் பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திரு.M.பாபு, சார் பதிவாளர், வேதாரண்யம் | - | 56,000 |
| 2 | ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி,23,கீழவீதி, வேதாரண்யம் | 950 | 44,800 |
| 3 | திரு.A.அருண்ராஜ், த/பெ.அமரேஷ், 16/30, சன்னதி கீழத்தெரு, வேதாரண்யம் | 150 | 19,900 |
| 4 | திரு.C.விவேக், சந்திரசேகரன், த/பெ. பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் | 220 | - |
| | **மொத்தம்** | **1,320** | **1,00,800** |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணத்திற்குண்டான சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அந்த பணம் ரூபாய் **1,320/-** அவரவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது வேதாரண்யம் சார்பதிவாளர் திரு.M.பாபு அவர்கள் தூக்கி வீசிய ரப்பர் பேண்ட் சுற்றப்பட்ட மூன்று பணக்கத்தைகளில் **1)**ஆவணம் செட்டில் -1 – 5000, வரவு ரசீது -2 – 2000, நாகக் -2 – 7000, Dr செட்டிபுலம் - 2 – 4000, திருமணம் - 1 – 1000/- 19000 என்று எழுதப்பட்ட பேப்பரின் பின்புறம் வட்டாட்சியர் அலுவலக இணையசேவை – நில உரிமை விபரங்கள் அடங்கிய பட்டா எண் 1810ன் நகலில் ரூபாய் 19,000/-மும், **2)**தே தெற்கு – 2 – 10000, வீடு 2000, 12000 என்று எழுதப்பட்ட துண்டு பேப்பரின் பின்புறம் புல எண் 73/4C, 73/6B1 ஆகியவற்றின் விபரம் அடங்கிய நகலில் ரூபாய் 12,000/-மும், **3)**தமிழ்நாடு அரசு பதிவுத்துறை ஒப்புகைச்சீட்டு பரிவர்த்தனை நாள் 01.11.2023 என்று பிரிண்ட் செய்யப்பட்ட வெள்ளை நிற பேப்பரில் ரூபாய் 25,000/-மும், ஆக மொத்தம் ரூபாய் **56,000/-** இருந்தது. சார் பதிவாளர் திரு.பாபு அவர்களை சோதனை செய்ததில் அவரிடம்

எந்தவித பணமும் இல்லை. மேற்படி மூன்று பணக்கத்தைகளில் இருந்த ரூபாய் 56,000/- பற்றி சார்பதிவாளர் திரு.பாபு அவர்களிடம் விசாரிக்க, அந்த பணம் அலுவலக செலவுகளுக்காகவும், அலுவலகம் மாற்றம் செய்ததால் உண்டான செலவு தொகைகளை எனது உயர் அலுவலகத்திலிருந்து பெறமுடியாது என்பதால்தான் ஆவண பதிவு செய்ய வருபவர்களிடம் கேட்டு பெற்றேன் என்று கூறினார். எனவே சரியான முகாந்திரம் கூறாத, குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பத்திரம் பதிவு செய்ய வந்தவர்களிடம், ஆவண எழுத்தர்களிடமிருந்து கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் **56,000/-** மற்றும் மேற்கண்ட விபரப்படியான மூன்று வெள்ளை பேப்பர்கள் திடீர் நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது, ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் என்பவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் ரூபாய் 950/-ம், அவர் வைத்திருந்த கருப்புகலர் ஹேண்ட் பேக்கில் மொத்தம் ரூபாய் 94,800/- இருந்தது. ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன் அவர்கள் சட்டை பையில் வைத்திருந்த ரூபாய் 950/- அவரது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதால் அந்த பணம் ரூபாய் 950/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரது ஹேண்ட் பேக்கில் வைத்திருந்த ரூபாய் 94,800/-ல் ரூபாய் 50,000/- திரு.M.நைனாமுகம்மது, த/பெ.மீராஉசேன், காசித்தெரு, தோப்புத்துறை என்பவருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்வதற்குண்டான முத்திரைத்தாள் கட்டணம் ரூபாய் 40,000 மற்றும் பதிவு கட்டணம் ரூபாய் 10,000/- என்றும் தெரிவித்தும், மீதத்தொகைக்கு சரியான முகாந்திரம் கூறாததால் அந்ததொகை அவர் எழுதிய பத்திரத்திற்கு அவர்களது பார்டியினருக்கு சார்பதிவாளர் சலுகை செய்யவேண்டி, சார்பதிவாளரை துாண்டுதல் செய்வதற்காக சார்பதிவாளருக்கும் மற்றும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மொத்தப்பணம் ரூபாய். 94,800/-ல் ரூபாய் 50,000/-த்தை ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன் அவர்களிடம் திரும்ப கொடுத்துவிட்டு, மீதமுள்ள ரூபாய் **44,800/-** மட்டும் திடீர் நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு அலுவலகத்திற்கு வந்த வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் திரு.M.கலந்தர் நைனா முகம்மது என்பவரிடம் இன்று 01.11.2023 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றி கேட்க, 2 கிரய பத்திரங்கள், 1 MOD, 3 Loan Clearance, 2 Settlement, 1 திருமணப்பதிவு, 1 பிழைதிருத்தம் ஆகிய 9 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேற்படி **9 ஆவணங்களையும்** கணினியில் நகல் எடுத்து சான்றொப்பமிட்டு வழங்கியதையும் மற்றும் வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலக **வருகை பதிவேடு**(சார் பதிவாளர் திரு.பாபு 20.10.2023 ஆம் தேதி முதல் கையொப்பமிடவில்லை மேலும் நவம்பர் மாதம் வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் யாரும் கையொப்பமிடவில்லை), வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலக **தனிநபர் இருப்பு பதிவேடு**(வேதாரண்யம் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் இருப்பு தொகை பற்றிய பதிவேட்டின்படி

திரு.M.லெட்சுமிசேகர், Camera operator அவர்களைதவிர மற்ற சார்பதிவாளர் மற்றும் மற்றைய அலுவலர்கள் எவரும் அவர்கள் வைத்திருந்த தொகைகளை இன்று 01.11.2023 ஆம் தேதி தனிநபர் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை) ஆகிய ஆவணங்களையும், திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் சார்பதிவாளர் பத்திரம் பதிவு செய்தவர்களிடமும் ஆவண எழுத்தர்களிடமும் கையூட்டாக பணம் கேட்டு பெற்ற பணம் மற்றும் ஆவண எழுத்தர் சார்பதிவாளர் அவருக்கு சாதகமாக தூண்டுதல் செய்ய கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.1,00,800/-,** மேற்கண்ட விபரப்படியான **3 வெள்ளை பேப்பர்கள்** இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் அவர்கள் வேதாரண்யம் சார் பதிவாளர் திரு.M.பாபு மற்றும் ஆவண எழுத்தர் (No.B4913/84 NGM) திரு.V.P.சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் ஆய்வு சோதனை செயல்முறைகள் 01.11.2023 ஆம் தேதி இரவு 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. **பணிந்து சமர்பிக்கப்படுகிறது.** இன்று **02.11.2023** ஆம் தேதி காலை **07.00** மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக அறிவுரைப்படியும், துணை காவல் கண்காணிப்பாளர், மயிலாடுதுறை, பொறுப்பு நாகப்பட்டினம் அவர்களின் அறிவுரைப்படியும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு **குற்ற எண்.02/2023,** U/s. 7, 7-A and 12 of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

[signature] 2.11.2023
Inspector, VRAC, Nagapattinam

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் மகஜர், எதிரிகள் 1)திரு.M.பாபு, சார்பதிவாளர், வேதாரண்யம் மற்றும் 2)ஆவண எழுத்தர் திரு.V.P.சந்திரசேகரன், த/பெ.பொன்னுசாமி, 23, கீழவீதி, வேதாரண்யம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

[signature]
**(G.RAMESH KUMAR),** 2.11.2023
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.